

கழக துணைப் பொதுச்செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.யின் மனைவி மறைந்த மு.அ.பரமேஷ்வரி 5 ஆம் ஆண்டு நினைவு தினம் பெரம்பலூர் மாவட்டம்,வேலூர் கிராமத்தில் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர்கள் சா.சி.சிவசங்கர், சி.வெ.கணேசன் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள். இதில் ஆ.இராசா.எம்.பி., குடும்பத்தினர், மற்றும் பெரம்பலூர்,அரியலூர், நீலகிரி மாவட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி

# கிராமம், கிராமமாக எ.வ.வேலு நன்றி தெரிவித்தார்!

## பொதுமக்கள் சால்வைகள் அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் வரவேற்பு!

திருவண்ணாமலை,மே.31-

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் மூன்றாவது நாளாக, கிராமம், கிராமமாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார். பொதுமக்கள் சால்வைகள் அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் வரவேற்றனர்.

29.05.2026 வெள்ளிக்கிழமை மாலை 5.00மணிக்கு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக போட்டியிட்டு, வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்தில் கிராமம், கிராமமாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாலை 5.00மணி முதல் திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவண்ணாமலை ஒன்றியத்தில் உள்ள நல்லாண்பிள்ளைபெற்றாள், பள்ளிகொண்டாப்பட்டு, ஏந்தல், எடப்பாளையம், தென்மாத்தூர், உடையானந்தல், அழகானந்தல், கண்ணப்பந்தல், கொளக்குடி, நடுப்பட்டு, சு.ஆண்டாப்பட்டு, அரடாப்பட்டு, பவித்திரம் உள்ளிட்ட கிராமங்களில் 4வது நாளாக வீதி, வீதியாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராமங்களிலும், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கு மேள, தாளம் முழங்க பட்டாசுகள் வெடித்தும், சால்வைகள் அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் பொதுமக்கள் வரவேற்றனர்.

நன்றி அறிவிப்பு நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், தொ.மு.ச. மாநில செயலாளர் க.சௌந்தரராசன், கலைவாணிகலைமணி, மாவட்ட அமைப்பாளர்கள் சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, க.கங்காதரன், கோ.நடராஜன், சி.ரவி, வழக்கறிஞர் கோ.கண்ணன், கோ. தனஞ்செழியன், செல்வராஜ், வே.காசிநாதன், கொளக்குடி பழனி, ரே.வெங்கடேசன், காத்தமுத்து, ரங்கராஜ், தங்கராஜ் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி இயக்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நடிகர் - நண்பர் அஜித்குமார் தாயார் மறைவு!

## உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, மே.31-**

**நடிகர் அஜித்குமார் அவர்களின் தாயார் மறைவுக்கு தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

நடிகரும் நண்பருமான அஜித்குமார் அவர்களுடைய அன்பு தாயார் திருமதி மோகினி மணி அம்மையார் அவர்கள் மறைந்த செய்திக் கேட்டு வருத்தமுற்றேன்.

அஜித் அவர்கள், வாழ்வில் பல்வேறு உயரங்களைத் தொட உறுதுணையாகஇருந்தவர்அவருடைய தாயார்.

அவரை இழந்து வாடும் நண்பர் அஜித் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்த நாள்! திருப்பூர் தெற்கு மாவட்டத்தில்

# நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்.பி., அறிக்கை!



திருப்பூர்,மே 31-

தெற்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தளபதி அவர்களின் அறிவிப்பின்படி உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பாக கொண்டாட வேண்டுமென மாவட்ட கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் பொறுப்பை அரை நூற்றாண்டு காலம் சிறப்புடன் நிறைவேற்றியவர். 5 முறை 19 ஆண்டுகள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக பொறுப்புவகித்து நவீன தமிழகத்தை உருவாக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்த நவீன தமிழகத்தின் சிற்பி, இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வித்தகராக திகழ்ந்த தமிழ் தாயின் தலைமகன், தமிழ் மொழியை, தமிழர்களை தன் உயிராய் நேசித்தவர், தமிழ் மண்ணில் சமூக நீதியை நிலைநாட்ட விடாப்பிடியாக போராடி வெற்றி கண்டவர், உயர் கல்வியை வளர்த்தெடுக்க அயராது உழைத்து முத்திரை பதித்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

கலைஞரின் செயல்பாட்டு சிறப்பினை பின்பற்றி தமிழக மக்களுக்காக தொடர்ச்சியாக செயலாற்றி வரும் தி.மு.க தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று 03.06.2026 புதன்கிழமை அன்று திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக, கிளைக் கழகங்கள் தோறும் கலைஞரின் திருஉருவச்சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தி முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள்,

பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநல காப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்த தான முகாம்கள் சிறப்பாக நடத்திட வேண்டுமாய் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள்,

கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு செம்மொழி நாயகர் கலைஞரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## தி. அ. முகமதுசகி — கார்த்திகேயன் பங்கேற்பு!

வேலூர், மே, 31

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் க.ராஜ மார்த்தாண்டன் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட அவைத்தலைவர் தி. அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணிதுணை அமைப்பாளர்கள் என்.பிரகாஷ், வி. எம். டி. பாலாஜி அர்ச்சனா நவீன் சங்கர்,தீனதயாளன், விஸ்வநாத், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ. ரவிக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஒட்டன்சத்திரம் பகுதியில் தேர்தல் நன்னடத்தை விதியால் இன்னும் மறைக்கப்பட்டுள்ள

# அரசுத் திட்ட கல்வெட்டுகள் - நீக்கப்படாததால் மக்கள் வேதனை!

ஒட்டன்சத்திரம், மே 31-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த ஆட்சிக் காலத்தில் சுமார் ரூ.5,000 கோடி மதிப்பீட்டில் பள்ளிகள், கல்லூரிகள், மேம்பாலங்கள், சாலைகள், குடிநீர் வசதிகள் மற்றும் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இத்திட்டங்கள் தொடர்பான விவரங்களை பொதுமக்கள் அறியும் வகையில் பல இடங்களில் கல்வெட்டுகள் மற்றும் தகவல் பலகைகள் அமைக்கப்பட்டிருந்தன.

தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தபோது, அரசின் திட்டங்கள் தொடர்பான கல்வெட்டுகள் மற்றும் பெயர்ப் பலகைகள் துணியால் மூடப்பட்டன. தேர்தல் முடிந்து புதிய அரசு பொறுப்பேற்று விட்ட பின்பும் , பல இடங்களில் கல்வெட்டுகள் இன்னும் திறக்கப்படாமல் இருப்பதாக பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் விவரங்கள் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக கல்வி வளர்ச்சிக்காக பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள், மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள், போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில் மேம்பாலங்கள், கிராம மற்றும் நகர சாலைகள், குடிநீர் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் விவரங்கள் அடங்கிய கல்வெட்டுகள் இன்னும் மறைக்கப்பட்டிருப்பதால் திட்டங்கள் குறித்த தகவல்களை பொதுமக்கள் அறிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் கூறுகையில், “மக்களின் வரிப்பணத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல்களை அறியும் உரிமை அனைவருக்கும் உள்ளது. தேர்தல் காலத்தில் விதிமுறைகளின் காரணமாக கல்வெட்டுகள் மூடப்பட்டிருந்தாலும், தேர்தல் முடிந்த பிறகு அவற்றை மீண்டும் திறந்து பொதுமக்களின் பார்வைக்கு கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால் பல இடங்களில் இன்னும் மூடிய நிலையிலேயே இருப்பது வருத்தமளிக்கிறது” என தெரிவித்தனர்.

சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுநல அமைப்பினர், “அரசுத் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படையாக மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும். எந்த ஆட்சியில் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது, எப்போது பணிகள் நிறை வேற்றப்பட்டன போன்ற விவரங்கள் கல்வெட்டுகள் மூலமாகவே பொதுமக்களுக்கு தெரிய வருகின்றன. அவற்றை தொடர்ந்து மறைத்து வைப்பது சரியான நடைமுறையாக இருக்காது” என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

எனவே, ஒட்டன்சத்திரம் பகுதியில் கடந்த ஆட்சியில் சுமார் ரூ.5,000 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்களின் விவரங்களை கொண்ட கல்வெட்டுகள் மற்றும் தகவல் பலகைகளை உடனடியாக திறந்து, பொதுமக்களின் பார்வைக்கு கொண்டு வர மாவட்ட நிர்வாகமும் சம்பந்தப்பட்ட துறைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சரின் திருப்பரங்குன்றம் தொகுதியில்

# மூடப்பட்ட டாஸ்மாக் கடை மீண்டும் திறப்பு!

## பொதுமக்கள் அதிர்ச்சி!

மதுரை, மே. 31-

மதுரை திருப்பரங்குன்றத்தில் மூடப்பட்ட டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதால் பொது மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பாரின் உரிமையாளர் த.வெ.க.வைத் சேர்ந்தவர் என்பதே டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதற்கு காரணம் என பொது மக்கள் குற்றம்சாட்டி உள்ளனர்.

திருப்பரங்குன்றம் காவல் நிலையம், திருப்பரங்குன்றம் பேருந்து நிலையம், உயர்நிலைப் பள்ளி, அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் டாஸ்மாக் கடைகள் இயங்கி வந்தன. வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கு அருகே செயல்பட்டு வரும் மதுபான கடைகளை மூட அரசு உத்தரவிட்டதைத் தொடர்ந்து இந்த 3 கடைகளும் அண்மையில் மூடப்பட்டன.

இந்நிலையில், 5556 எண் கொண்ட டாஸ்மார்க் கடை 2 நாட்களுக்கு முன் மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. திருப்பரங்குன்றம் கோயிலுக்குச் சொந்தமான ஸ்ரீ ஆண்டவர் சுப்பிரமணியசுவாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் இந்த டாஸ்மாக்கை கடந்துதான் சென்று வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள், பாரின் உரிமையாளர் த.வெ.க.வைத் சேர்ந்தவர் என்பதே டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டதற்கு காரணம் என்று குற்றம்சாட்டுகின்றனர்.

அமைச்சர் நிர்மல் குமாரின் தொகுதியில், மூடப்பட்ட டாஸ்மாக் கடை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தி உள்ளது.

# த.வெ.க.வை விமர்சித்ததால் கொலை மிரட்டல்!

## காவல் ஆணையர் அலுவலகத்தில் ஜூலி பேட்டி!

சென்னை, மே 31-

சென்னை காவல் ஆணையர் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வந்த நடிகை ஜூலி, தனது கணவருடன் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் அளித்த பேட்டி வருமாறு:

நான் த.வெ.க. கட்சிக்கு எதிராகக் கருத்து தெரிவித்த ஒரே காரணத்திற்காக, சிலர் என்னை கொச்சையாகச் சிதைக்கிறார்கள். அவர்கள் என் மீது கிட்னி திருடியதாகக் கூறுவது போன்ற கற்பனை செய்ய முடியாத அவதூறுகளைப் பரப்புகிறார்கள். என்னைக் கொலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்படுபவர்கள் மீது புகார் கொடுக்கவே வந்திருக்கிறேன்.

இது தொடர்பாக எட்டு பேர் மீது நான் புகார் கொடுத்தேன். ஆனால், காவல்துறை என் வசம் உள்ள ஆடியோ ஆதாரங்களையோ, ஸ்கிரீன் ஷாட்களையோ வாங்கிப் பார்க்கக் கூட இல்லை. சட்ட ஆலோசகர் மூலம் விசாரிப்பதாகச் சொல்லிவிட்டு, என்னை விசாரணைக்குக் கூட அழைக்காமல், வழக்கை எடுக்க மறுத்துவிட்டார்கள். ஆளும் தரப்பிற்கு ஒரு நியாயம், எங்களுக்கு ஒரு நியாயமா என்றுதான் கேட்கிறேன்.

என்னையும் என் கணவரையும் பற்றிப் பெசன்ட் நகர் பீச்சில் வைத்து 15 லட்சம் பணம் வாங்கினோம், கிட்னி தருவதாக ஏமாற்றினோம் என்று ஒரு சினிமா ஸ்கிரிப்ட் போலக் கதை கட்டுகிறார்கள். எனக்கு எதிராகவும், என் குடும்பத்திற்கு எதிராகவும் ஆபாசமாகப் பேசுபவர்கள் மீதும், கொலை மிரட்டல் விடுபவர்கள் மீதும் காவல்துறை உடனடியாகச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சட்டமன்ற தொகுதி - கள ஆய்வு!

சிவகங்கை மாவட்டம் சட்டமன்ற தொகுதிகள் - கள ஆய்வு - எஸ்.ஜோயல், எ.வ.வே.கமபன்

| தேதி | இடம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 31.05.2026 காலை 10.00 மணி | அபிராமி மஹால் - காரைக்குடி | 184 - காரைக்குடி சட்டமன்றம் |
| 01.06.2026 காலை 10.00 மணி | ராயல் மஹால் - சிவகங்கை | 185 - சிவகங்கை சட்டமன்றம் |
| 02.06.2026 காலை 10.00 மணி | கோபால் - இந்திரா மஹால் மானாமதுரை | 187 - மானாமதுரை சட்டமன்றம் |

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 18.
நாள் :30.05.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா! திருப்பூர் வடக்கு மாவட்டம் முழுவதும்

# நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார் வேண்டுகோள்!



திருப்பூர்,மே 31-

திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தளபதி அவர்களின் அறிவிப்பின்படி திருப்பூர் வடக்கு, அவிநாசி சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பாக கொண்டாட வேண்டுமென மாவட்ட கழகப் பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந. தினேஷ்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு: திருப்பூர் வடக்கு மாவட்டத்தில் ஜூன் 3 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழாவை செம்மொழி நாளாக கொண்டாட வேண்டுமென அறிவித்த கழக தலைவர், தளபதி அவர்களின் அறிவிப்பின்படி திருப்பூர் அவிநாசி சாலை, 15 வேலம்பாளையத்தில் அமைந்துள்ள வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு 03.06.2026 புதன்கிழமை அன்று காலை 9.00 மணியளவில் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இதேபோல் திருப்பூர் வடக்கு, அவிநாசி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு கழக, கிளைக் கழகங்கள் தோறும் கலைஞரின் திருஉருவச் சிலைக்கும், சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள்,

மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள், மனநல காப்பகம், பார்வையற்றோர் இல்லம் போன்ற இடங்களில் காலை, மதியம், இரவு உணவுகள் வழங்கியும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, புத்தாடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், இலவச கண் மருத்துவ சிகிச்சை முகாம், இரத்த தான முகாம்கள் சிறப்பாக நடத்திட வேண்டுமாய் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் இந்நாள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு செம்மொழி நாயகர் கலைஞரின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.